கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 15.08.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 78வது சுதந்திர தின விழா**

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 78வது சுதந்திர தின விழா 15.08.2024 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கௌரவ கர்னல் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செய்து சுதந்திர தின விழா உரையாற்றினார்.

துணைவேந்தர் தனது 78வது சுதந்திர தின சிறப்புரையில் சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்த சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவு கூர்ந்தார். 78வது சுதந்திர தினத்தின் "விக்சித் பாரத்" எனும் முழக்கத்தை கோடிட்டுக்காட்டினார். பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் நல்ல நிர்வாகம் உள்ளிட்ட வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை இம்முழக்கம் அடையாளப்படுத்துகிறது.

கடந்த 50 ஆண்டுகளில் 929 பயிர் வகைகள், 1500 தொழில்நுட்பங்கள், 150 இயந்திரங்களை வெளியிட்டு இந்தியாவில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை அடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பங்களித்துள்ளதை எடுத்துரைத்தார். இவ்வாண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 24 புதிய பயிர் வகைகள், 7 பண்ணை தொழில்நுட்பங்கள், 5 பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவில் முதல் இடத்தை அடைவதற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

78வது சுதந்திர தின விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள், துறைத் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக தேசிய மாணவர் படை மாணவர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மாணவர் நல மைய முதன்மையர் முனைவர். நா. மரகதம். அவர்கள் செய்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**